**தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை - 2024**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1971 இன் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி சட்டத்தின், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, அதிகாரசபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் அதிகாரசபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான

பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபையிற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது பயன்படுதகு ஆயுட் காலம் முடிவடைந்திருந்த ரூபா 2,096,164 இற்கான ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு அல்லது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரிவு 65 இன் பிரகாரம் சொததொன்றின் மீதிப் பெறுமதி மற்றும் பயன்படுதகு ஆயுட் காலம் குறைந்தது ஒவ்வொரு அறிக்கையிடும் காலப் பகுதி இறுதியிலும் மீளாய்வு செய்தல் மற்றும் எதிர்பார்த்த நிலைமைகள் மதிப்பீடுகளின் மூலம் மாற்றமடைந்தால் அந்த வித்தியாசம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 – “கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் தவறுகள்” பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீட்டு வித்தியாசங்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2025 ஆண்டின் போது குழுவொன்று நியமனம் செய்யப்பட்டு மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் செயற்படவில்லை. |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2024 ஆண்டில் நடைபெற்ற தெங்கு பிரஜைகளின் 60 ஆவது ஆண்டு | 2024 ஆண்டின் ஐந்தொகை திகதியின் அங்கீகரிக்கப்பட்ட செயல் பின்னர் நிகழ்வுகள் | |

| | | | |
|---|---|---|---|
| | விழா கொண்டாடுவதற்காக 2025 ஆண்டின் செலுத்தப்பட்டிருந்த ரூபா 5,241,800 இற்கான தொகை மீளாய்வாண்டிற்கான செலவுகள் என அட்டுருப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைத் திட்டத்தில் ஏற்பாடுகள் காணப்படாமையால் இது தொடர்பாக பணிப்பாளர் சபைப் பத்திரமொன்று சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக புதிய தகவல்களை விரிவாக அனுப்பும் படி அறிவிக்குமாறு அமைச்சுச் செயலாளருக்கு 2025.01.02 திகதி அறிவிக்கப்பட்டிருந்தது.<br><br>அமைச்சரவை தீர்மானத்திற்குரிய கடிதம் 2025.01.08 திகதி வழங்கப்பட்டிருந்ததுடன், அந்தக் கடிதம் அதிகாரசபைக்கு 2025.01.16 திகதியே கிடைத்திருந்தது.<br><br>2025.01.16 திகதியளவில் 2024.12.31 திகதியில் முடிவடைந்த இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், 2024.12.31 திகதியில் உள்ளவாறு நிதி முன்னேற்றமும் அமைச்சுக்கு அனுப்பப்பட்டிருந்தது. | கணக்குகள் தயாரிக்கும் போது கவனம் செலுத்தப்பட வேண்டியமையால் அறுதியாக இனங்காணப்பட்ட செலவுகள் நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட வேண்டும். |
| (ஆ) | சர்வேத தெங்கு பிரஜைகளின் 60 ஆவது ஆண்டு விழாவின் அமர்விற்காக 2024 ஆகஸ்ட் 07 திகதி அமைச்சுக்கு வழங்கியிருந்த ரூபா 7,000,000 தொகைக்கான செலவுக்குரிய செலவு விபரங்கள் மற்றும் உரிய பில் பத்திரங்கள் சமர்ப்பித்திருக்காமையால் அந்த செலவுகளின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு முடியாமல் இருந்தது. | கொடுப்பனவுகள் தொடர்பாக விரிவான செலவு அறிக்கை தெங்கு அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்குமாறு 2025.01.02 திகதிய அமைச்சுக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும், 2025.04.29 திகதி வரை அதற்கான பதிலொன்று கிடைத்திருக்கவில்லை. | கொடுப்பனவுகள் தொடர்பான சான்றுகள் சமர்பபிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட இனங்காணப்படாத வைப்பு மீதி ரூபா 2,833,390 தொகை மீளாய்வாண்டின் போது அதிகாரசபையினால் இனங்காணப்பட்ட மீதியென கணித்து ஆண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால், கணக்கீடு செய்தல்களின் சரியான தன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியவில்லை. | 2023.12.31 திகதியில் உள்ளவாறு இனங்காணபப்படாத வைப்புக்கள் என ரூபா 2,833,390 தொகையொன்று காணப்பட்ட போதிலும், அந்தத் தொகையிலிருந்து ரூபா 1,340,510 இற்கான தொகையொன்று குறிப்பிட்ட வைப்புத்தாரர்களை இனங்கண்டு இன்வொயிஸ்கள் வழங்கி கணக்கீடு செய்யப்பட்டது. எனினும், இந்தத் தொகையில் ரூபா 1,492,880.53 இற்கான தொகையொன்று 2024.12.31 திகதியல் உள்ளவாறு இனங்கண்டிருக்கவில்லை. | அறுதியாக இனங் காணாமால் வருமானத்திற்கு சீராக்கல் மேற்கொள்ளக்கூடாது. |
| (ஈ) | ரூபா 1,250,000 இற்கான மின்சார வைப்புத் தொகைக்கான திரண்ட ஆண்டிற்குரிய ரூபா 312,625 தொகைக்கான வட்டியை வருமானம் என இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | மின்சார தொடர்புக்காக வைக்கப்பட்டிருந்த வைப்புக்களுக்காக வட்டி செலுத்துதல் மின்சார சபையினால் 2024 ஏப்ரல் மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2025 ஆண்டு முதல் இந்த வைப்புக்களுக்குரிய வட்டி தனியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மின்சார வைப்புக்களை கணக்கீடு செய்வதற்கும் அதற்கான வருடாந்த வட்டியை கணக்கீடு செய்து ஆண்டிற்குரிய வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிதுடன், செலவுகள் மற்றும் வருமானங்கள் பதிலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கக் கூடாது. |
| (உ) | 2023 ஆண்டில் நன்கொடையொன்றாக கிடைத்திருந்த ரூபா 2,524,897 இற்கான ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் 2024 ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 2023 ஆண்டிற்குரிய ரூபா 252,490 தொகைக்கான பெறுமானத் தேய்வு கணக்கீடு செய்திருக்காமையால், திரண்ட பெறுமானத் தேய்வு மீதி குறைவாக காட்டப்பட்டிருந்தது. | 2025.12.31 முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்படுகின்ற இறுதிக் கணக்கு அறிக்கையில் இந்தப் பெறுமானத் தேய்வு சீராக்கல் முன்னைய ஆண்டிற்கான சீராக்கல் என கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2023 இல் நன்கொடையாக கிடைத்திருந்த ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் மீதி பெறுமானத் தேய்வு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சீராக்களின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | பெண் உத்தியோகத்தர் ஒருவருக்கு செலுத்த வேண்டிய ரூபா 290,460 இற்கான ஓய்வூதிய பணிக்கொடைப் பெறுமதி கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2025 ஆண்டு இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது இந்த வித்தியாசமாகிய ரூபா 290,460 தொகை முன்னைய ஆண்டிற்கான சீராக்கல் என கணக்கீடு செய்தவற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலவுகள் சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சேவையை விட்டு விளகிச் சென்றிருந்த இரண்டு உத்தியோகத்தர்களிடம் அதிகார சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 400,506 தொகை எனவும், அதனை ரூபா 191,555 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் பெற வேண்டிய பெறுமதி ரூபா 208,951 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | 2025 ஆண்டு இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது இந்த வித்தியாசமாகிய ரூபா 208,951 தொகை முன்னைய ஆண்டிற்கான சீராக்கல் என கணக்கீடு செய்தவற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலவுகள் சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் பிரிவு 33(4) | தென்னை தொடர்பாக செஸ் வரி விதித்தல், அறவீடு செய்தல், செயற்படுத்துதல், கொடுப்பனவு செய்வதற்காக அதிகாரசபைக்கு தேனையான அனைத்து விடயங்கள் தொடர்பாகவும், கட்டளைகள் ஆக்குவதற்கு இயலுமாக இருந்த போதிலும், அது தொடர்பாக கட்டளை ஏதும் இதுவரை தயாரித்திருக்கவில்லை. அவ்வாறு இருக்கும் போது செஸ் வரி மூலம் கிடைக்கக் கூடிய | தேய்காய் துருவல் தொழிற்சாலை அபிவிருத்தி நிதியம் மற்றும் ஊழியர் சலுகை வேதன நிதியம் ஆகிய இரண்டு நிதியங்களையும் ஒன்றினைப்பதற்கும் அதன் மூலம் நலன் விளைவிக்கக்கூடிய ஊக்குவிப்புக்காக உற்பத்தியாளர்களுக்கு வசதியளிக்கும் குறிக்கோளுடன் 1987.07.01 திகதி முதல் புதிய நிதியம் நிறுவப்பட்டதென குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், 40 | தேவையான கட்டளைககள் ஆக்கப்படாமல் செலவுகள் மேற்கொள்ளக்கூடாது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வருமானம் மற்றும் ஏற்றுமதி செய்யும் தேங்காய்களில் இருந்து கிடைக்கக்கூடிய வருமானத்திலிருந்து நிதியமொன்று ஆக்கியிருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் ஆலை உரிமையாளர்களின் பெயரில் 58 கணக்குகளில் ரூபா 44,544,351 இற்கான மீதியொன்று காணப்பட்டதுடன், 2019 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரை அந்த கணக்குகளில் இருந்து ரூபா 12,442,516 இற்கான தொகையொன்று அந்த ஆலை உரிமையாளர்களுக்கு திருப்பி செலுத்தப்பட்டிருந்தது. | வருடங்களின் முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்த இந்த நிதியம் நிருவப்பட்ட சட்ட ஏற்பாடுகள் தொடர்பாக தகவல்கள் எதுவும் அதிகார சபையின் பழைய ஆவனங்களின் மூலம் கண்டறிய முடியாமல் இருந்தது. | |
| (ஆ) | 1971 இன் 46 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்திச் சட்டத்தின் பிரிவு 20(ஏ) | இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற அல்லது இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்ற தேய்காய் உற்பத்திகளின் பண்புசார் தன்மையை தீர்மானித்தல் மற்றும் பேணிச்செல்வதற்காக அதிகாரசபையினால் மேற்கொள்ள முடியுமாக இருந்த போதிலும், பொதி செய்யப்படாத உள்நாட்டு சந்தைக்கு அனுப்பப்படுகின்ற தேய்காய் எண்ணெய்யில் பண்புசார் தன்மையை பாதுகாப்பதற்கு தேவையான சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான கட்டளைகள் தயாரிப்பதற்கு அதிகார | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. | பொதி செய்யப்படாத எண்ணெய் சந்தைக்கு வருவதை தடுப்பதற்கு சட்டங்கள் ஆக்கப்பட வேண்டும். |

சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மீளாய்வாண்டிற்கான வருடாந்த அறிக்கையின் படி நகர்சார் பகுதிகள் தவிர்ந்த ஏனைய கிராமப் பகுதிகளில் விற்பனை செய்யக்கூடிய தேய்காய் எண்ணெய் ஒழுங்குறுத்தப்படாத காரணம் அல்படொக்ஸின் அடங்கியமை தொடர்பாக அபாயம் உணர்த்தப்பட்டிருந்தது. அது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்காததுடன், பொதி செய்யப்படாத தேய்காய் எண்ணெய் சந்தைக்கு வருவதை தடுப்பதற்கு கட்டளையொன்றின் மூலம் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் எனினும், அதிகாரசபையினால் அவ்வாறு மேற்கொண்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 184,152,635 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 170,788,322 தொகை ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 13,364,313 இற்கான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு நேரொப்ப மீளாய்வாண்டின் ஆய்வுகூட வருமானம், புதிய தென்னை துறைப் பரிசோதனை மற்றும் தயாரிப்பு கட்டண வருமானம், கொள்களன் பரிசோதனை வருமானம் முறையே ரூபா 21,581,805 தொகை, ரூபா 29,648,650 தொகை, ரூபா 4,290,386 தொகை அதிகரித்தலும் தரக் கட்டுப்பாடு மற்றும் பண்பு சான்றுபடுத்தல் பிரிவின் மூலதன அபிவிருத்திச் செலவு ரூபா 3,628,715 இனால் குறைவடைதலும் இந்த முன்னேற்றத்திற்கு பிரதானமான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைததுவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேய்காய் உற்பத்திகளின் விலைகள் கூடிக் குறைவதனால் சந்தைக்கு தேங்காய் உற்பத்திகள் வழங்கும் போது விலைகளை உறுதிப்படுத்துவதற்காக நிதியமொன்று ஆரம்பிக்கப்பட்ட போதிலும், அவ்வாறான நிதியமொன்று ஆரம்பிப்பதற்காக நியதிச் சட்டக் கட்டளையொன்று வழங்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்படவில்லை. மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் படி இந்த நிதியத்தின் மீதி ரூபா 439,620,170 தொகையாக காணப்பட்டதுடன், நிதியம் நிறுவப்பட்ட அடிப்படைக் குறிக்கோளும் இதுவரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த நிதியம் ஆரம்பித்தல் தொடர்பாக அதிகார சபையிடம் எழுத்துமூல தகவல்கள் காணப்படவில்லை. அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது இது தொடர்பாக ஆய்வு செய்வதற்காக குழுவொன்று நியமனம் செய்யப்பட்டு குழுவினால் தீர்மானம் வழங்கும் படி அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. அதிகாரசபையின் சிரேஷ்ட முகாமைத்துவ பதவியில் உள்ள 03 உத்தியோகத்தர்கள், பெருந்தோட்ட அமைச்சின் உத்தியோகத்தர் ஒருவர், திறைசேரி உத்தியோகத்தர் ஒருவர் இந்தக் குழுவிற்கு நியமனம் செய்யப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் படி பணிப்பாளர் சபையினால் அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. திறைசேரியின் உத்தியோகத்தர் ஒருவர் பெயர் குறிப்பிட்டினுப்பிய பின்னர் குழுக் கூட்டம் நடாத்தி இது தொடர்பான குழுத் தீர்மானத்தை அறிவிக்கப்படவுள்ளது. | நியதிச் சட்டக் கட்டளையின் படி நிதியம் ஆரம்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஏற்றுமதிக்கான தற்காலிக இறக்குமதி செய்முறையின் போது (TEIP) பெறுமதி கூட்டி மீண்டும் ஏற்றுமதி செய்யும் போது அதிகாரசபையினால் தெரிவுப் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படுவதுடன், ஆய்வுகூட பரிசோதனை | மீள் ஏற்றுமதிச் செய்முறையின் நாட்டில் பெற்றுக்கொள்ளப்படும் இந்த இருப்பு மீள் ஏற்றுமதிக்காக தயாரிக்கப்பட்ட உற்பத்தியை அதிகாரசபையின் பரிசோதனையாளரினால் மாதிரியொன்று பெற்றுக்கொண்டு ஆய்வுகூட | ஏற்றுமதிக்கு முன்னர் ஆய்வுகூட அறிக்கை பெற்றுக்கொள்ளக்கூடியவாறு ஆய்வுகூட சேவைகளை விரைவுபடுத்துவதற்கும் ஒரு நாளில் 24 மணித்தியாள சேவை பெற்றுக்கொள்ளக்கூடியவாறு |

அறிக்கை வழங்குவதற்கு முன்னர் அந்த மீள் ஏற்றுமதி செய்முறை முடிவடைந்திருந்தது. மீளாய்வாண்டு திசெம்பர் 02 திகதி வரை சுத்திகரிக்கப்படாத எண்ணெய், RDB, தேய்காய் சீனி, தேங்காய் தண்ணீர் ஆகிய நான்கு உற்பத்திப் பொருட்களுக்காக 3,525,648 கிலோ கிராம்கள் மீள் ஏற்றுமதிக்காக பரிசோதனை அறிக்கைகள் கிடைப்பதற்கு முன்னர் அதிகாரசபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இவ்வாறான 164 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதன் அறிக்கைகள் சமர்ப்பிப்பதற்காக 01 மாதம் முதல் 03 மாதங்கள் வரையான இடைப்பட்ட காலவீச்சொன்று கடந்திருந்தது. ஆய்வுகூட அறிக்கை வழங்குவதற்கு முன்னர் மீள் ஏற்றுமதிக்கு அங்கீகாரம் வழங்குதல், தேங்காய் உற்பத்தி தொடர்பாக பொதுமக்களின் நம்பிக்கை இழக்கும் ஆபத்து நிலைமையொன்று அவதானிக்கப்பட்டது.

பரிசோதனைக்காக அனுப்பப்படுவதுடன், அந்த மாதிரிக்கான பெறுபேறுகள் வழங்குவதற்காக ஒரு குறிப்பிட்ட கால வரையறையொன்று எடுத்திருந்தது. குறிப்பிட்ட ஏற்றுமதி தொடர்பாக பெறுபேறுகள் வெளியிடும் வரை நாட்டில் வைத்திருக்கும் போது குறிப்பிட்ட ஏற்றுமதியாளருக்கு பாரிய செலவொன்று மேற்கொள்வதற்கு நேரிடுவதுடன், குறிப்பிட்ட தினத்தில் ஏற்றுமதி செய்ய முடியாமல் போனால் ஏற்றுமதியாளரின் கொள்வனவாளரை இழக்கும் இயலுமை காணப்பட்டது. இதன் காரணமாக ஏற்றுமதியாளருக்காக தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையினால் முன் ஏற்றுமதி அறிக்கைகளை கவனம் செலுத்தி அந்த தோற்றத்தின் பிரகாரம் (Green Channel Concept) ஏற்றுமதியாளரின் வசதிகள் மற்றும் அதன் மூலம் நாட்டிற்கு கிடைக்கூடிய ஏற்றுமதி வருமானம் ஆகிய விடயங்களை கவனம் செலுத்தி ஆய்வுகூட அறிக்கைகள் வழங்குவதற்கு முன்னர் மீள் ஏற்றுமதிக்கான அதிகாரம் No objection கடிதம் வழங்கப்படுகின்றது. No objection வழங்கப்பட்ட மாதிரிகள் பெற்றுக்கொள்ளல் அத்தியவசியமான விடயம் ஒன்றாகும். பகுப்பாய்வு அறிக்கைகளில் மேலும் சிக்கல்கள் காணப்படின் முன்வரும் காலங்களின் அந்த நிறுவனத்தின் ஏற்றுமதி செய்யப்படுகின்ற ஆய்வுகூட சேவைகள் விரிவுபடுத்த வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | கொள்கலன்கள் பகுப்பாய்வு விளைவுகள் மீது மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு ஏற்றுமதிக்கான அங்கீகாரம் வழங்கல் மேற்கொள்ளப்படுகின்றது. | |
| (இ) | கப்ருக ஜய இசுர கடன் திட்டத்தை செய்படுத்துவதற்காக அதிகாரசபை, பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் அணுகியிருந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரிவு 3.3 இன் பிரகாரம் தொழிற்படு கடன் கணக்கின் உச்சமட்டம் ரூபா 10 மில்லியனிற்கு வரையறுக்கப்பட்டிருந்ததுடன், மிகைப் பணம் நிலையான வைப்புக் கணக்கொன்றிற்கு மாற்ற வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தொழிற்படு கடன் கணக்கின் ரூபா 30,888,823 இற்கான மீதியொன்று காணப்பட்ட போதிலும், ரூபா 20,888,823 தொகைக்கான மிகைத் தொகையை நிலையான வைப்புக் கணக்கில் முதலீடு செய்வதற்கு அதிகாரசபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கப்ருப ஜய இசுர கடன் திட்டத்தின் கீழ் கடன் விண்ணப்பாரிகளுக்காக கடன் தொகையை விடுவிப்பதற்காக வங்கிக்கு அதிகார சபைத் தலைவர், பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளர் நிதி ஆகிய மூவரின் கையொப்பமிடப்பட்ட கடிதமொன்று வங்கிக்கு வழங்கப்பட வேண்டும். 2024 மே மாதம் முதல் பணிப்பாளர் நாயகப் பதவி வெற்றிடமாக காணப்பட்டதால் இந்தக் கடிதத்தை வங்கிக்கு அனுப்ப முடியவில்லை. எனினும், புதிய தலைவர் நியமனம் செய்ததுடன், குறிப்பிட்ட கடிதம் தலைவர் மற்றும் பணிப்பாளர் (நிதி) 2024 திசெம்பர் மாதம் பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு அனுப்பப்பட்டது. அதன் பெறுமதி ரூபா 30.3 மில்லியனாகும். அதனால் குறிப்பிட்ட பணம் நிலையான வைப்பில் முதலீடு செய்தல் மேற்கொள்ளப்படவில்லை. | பதவி வெற்றிடமானதுடன், அவ்வாறு கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மீண்டும் பெயர் குறிப்பிடுவதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஈ) | 2024 நவம்பர் 30 திகதி அளவில் துன்கன்னாவ தோட்டத்தில் தென்னை பயிர்ச் செய்கை சார்ந்த அனைத்து விளைச்சல் பெறும் மரங்களில் அனேகமானவற்றில் வெள்ளை ஈயினல் சேதப்படுத்தப்பட்டிருந்ததுடன், 2025 ஒக்தோபர் மாதத்தில் இனங் காணப்பட்டிருந்தது. இது தொடர்பாக இரண்டு | வெள்ளை ஈ தாக்கத்தை ஆரம்ப கட்டத்தில் இனங்கண்டு தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக 2022 ஆண்டு தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் பரிந்துரைக்கப்பட்ட இரசாயன எழுத்து முறைகள் எம்மால் விரைவாக மேற்கொள்ளப்பட்டது. அதேபோல், 2023 ஆண்டிலும், | வெள்ளை ஈ நோயை கட்டுப்படுத்த விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சந்தர்ப்பங்களில் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும், 2023 ஏப்ரல் மாதத்தின் பின்னர் கணக்காய்வுத் திகதி வரை வெள்ளை ஈ தாக்கத்தினை தவிர்க்க முடியாமல் இருந்தது. | வெள்ளை ஈ கட்டுப்பாட்டிற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. இரசாயன பொருட்கள் பயன்படுத்தி சில நாட்களில் அதன் வெற்றிகரத் தன்மை பரிசோதனை செய்ய முடியாது. தெளிக்கும் செறிவு தொடர்பாக ஒரு குறிப்பிட்ட காலம் ஆய்வு செய்ய வேண்டும். இரசாயன பொருட்கள் மூலம் வெள்ளை ஈக்களின் தாக்கத்தை கட்டுப்படுத்த முடியாது என அவதானிக்கப்பட்டது. மேலும், இரசாயன பொருட்கள் பரப்பிற்கு தொடர்ச்சியாக பயன்படுத்துவது மிகவும் பிரதிகூலமாக காணப்படுவதுடன், வேப்பெண்ணெய் போன்ற பண்டங்கள் உயர்ந்த மரங்களுக்கு செலுத்துதல் செய்முறை ரீதியாக முடியாமல் உள்ளது.<br>இதற்காக காணப்படும் ஒரே மாற்றுமுறை ஒட்டுண்ணிப் பொதிகள் பயன்படுத்துவதாகும். அந்த ஆய்வின் விளைவின் படி ஒட்டுண்ணிப் பொதிகள் பெற்றுக்கொள்வதற்காக தற்போது குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேற்குறிப்படப்பட்ட செய்முறைக்கு மேலதிகமாக வேறு எந்த செய்முறையும் இதுவரை பரிந்துரைக்கப்பட்டிருக்கவில்லை. வெள்ளை ஈயை அழிப்பதற்கான வெற்றிகரமான செய்முறையை இதுவரை கண்டறியப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2023 ஜூலை 06 திகதி நடைபெற்ற அரச தொழில்முயற்சிகள் குழுக் கூட்டத்தில் அதிகாரசபைக்காக | |

| | | |
|---|---|---|
| 07 பரிந்துரைகள் கடைபிடிக்கும் படி கட்டளையிடப்பட்டிருந்தது. அவற்றில் கீழ்வரும் 5 கட்டளைகளை செயற்படுத்துவதற்காக இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| i. சவுதி அரேபியாவில் 50 பில்லியன் மரங்களுக்கான பயிர்ச் செய்கை செயற்திட்டமொன்றுக்காக தேங்காய் மட்டை ஏற்றுமதி தொடர்பாக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுத்தல். | 2019 ஆண்டு முதல் 2024 ஆண்டு வரை 5,703 மெ.தொ. மட்டை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. | அரச தொழில் முயற்சிகளின் பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| ii. தெங்குப் பயிர்ச் செய்கையின் தற்போதைய சிக்கல்கள் தொடர்பாக தொலைக்காட்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக நடவடிக்கை எடுத்தல். | இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தினால் இது தொடர்பாக 18 நிகழ்ச்சித் திட்டங்கள் அடங்கிய ஒளிபரப்பு நேர அட்டவணை (TV Schedule) 2025.01.20 திகதி தெங்கு அபிவிருத்தி சபைக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும், தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையினால் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற தொழிற்பாடுகள் மற்றும் பங்குபற்றும் உத்தியோகத்தர் தொடர்பான விபரங்கள் தொலைக்காட்சிக்கு அறிவித்திருக்காததுடன், 2025.02.17 திகதி முதல் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக அங்கீகாரம் வழங்கப்பட்டு தெங்கு அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்டிருந்த குறிப்பிட்ட விரிவான அறிக்கை 2025,02.13 திகதி ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு அனுப்பப்பட்டது. | அரச தொழில் முயற்சிகளின் பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எனினும், தவிர்க்க முடியாத காரணங்களினால் திட்டமிடப்பட்டிருந்த ஒளிபரப்பு கால அட்டவணை மாற்றப்பட்டதென வாய்மொழி மூலம் அறிவித்திருந்ததுடன், அதற்குரிய புதிய கால அட்டவணை தெங்கு அபிவிருத்தி அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்படும் என கூறப்பட்டது. நிகழ்ச்சித் திட்ட கால அட்டவணை தெங்கு அபிவிருத்தி அதிகாகர சபைக்கு 2025.02.21 திகதி மீண்டும் ஒருமுறை இது தொடர்பாக விசாரணை செய்து ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதுவரை பதில் கிடைத்திருக்கவில்லை. இது தொடர்பாக வெகுசன ஊடக அமைச்சுச் செயலாளருடன் கலந்துரையாடல் ஒன்று நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| iii. | துன்கன்னாவ தும்பு அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையம் தொடர்பாக அறிக்கையொன்று அரச தொழில்முயற்சிக் குழுவிற்கு வழங்குதல். | தேசிய பொறியியல் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிலையத்தினால் இயந்திரங்களுக்கான பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்கான பரிந்துரையொன்று இந்த அறிக்கைத் திகதி வரை அறிவிக்கப்பட்டிருக்காமையால், பரிந்துரையொன்று பெற்றுக்கொள்வதற்காக பணிப்பாளர் சபை தீர்மானத்தின் படி குழுவொன்று நியமனம் செய்யப்பட்டிருந்தது. | அரச தொழில் முயற்சிகளின் பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| iv. | தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை, நுகர்வோர் சேவை அபிவிருத்தி சபை, சுகாதார அமைச்சு, வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்களம், | தேய்காய் எண்ணெய் பரிசோதனை செய்தல் தொடர்பாக அதிகாரம் அமைச்சரவை அங்கீகாரத்தின் மூலம் 2024.08.27 திகதி | அரச தொழில் முயற்சிகளின் பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இறக்குமதி மற்றும் ஏற்றுமதித் திணைக்களத்துடன், தரம் குறைவான தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்தல் தொடர்பாக சுகாதார சார் சிக்கல்கள் கலந்துரையாடல். | கிடைத்திருந்தது. இதற்கான பிரமாணம் ஒன்றை வரைவு செய்து சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது. | |
| v. | நிகழ்வு நிலை மூலம் விலைகூறல்கள் சமர்ப்பிக்கும் செய்முறை ஒன்று நிறுவுவதற்காகவும் மற்றும் அது தொடர்பாக முன்னேற்றம் 03 மாதங்களுக்குள் அரச தொழில் முயற்சிகள் குழுவிற்கு அறிவித்தல். | தேங்காய் ஏல விற்பனைக்காக தயாரிக்கப்பட்டுள்ள மென்பொருளை நாளதுவரை ஆக்குவதற்காக கோப் குழுவின் பரிந்துரையுடன், மொரட்டுவ பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் என்.டீ. குணவர்தன அவர்களுக்கு 2023.07.28 திகதி கடிதமொன்று அனுப்பப்பட்டது. எதிர் காலத்தில் நாளொன்று குறிப்பிட்டு கலந்துரையாடுவதற்காக வருகை தருவதாக வாய்மொழி மூலம் அறிவித்த போதிலும், அது நிறைவேற்றப்படாமையால், மீண்டும், 2023.10.12 திகதி அந்த பல்கலைக் கழக துணை வேந்தருக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டது. | அரச தொழில் முயற்சிகளின் பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தின் 04 பதவிகளும், மத்திய முகாமைத்துவ மட்டத்தில் 03 பதவிகளும், கனிஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 06 பதவிகளும் வெற்றிடமாக காணப்பட்டது. இந்த பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளாமல் 2024 ஆண்டு நவம்பர் வரை கடமையை நிறைவேற்றல் / பதில் கடமைக்காக நியமனம் செய்யப்பட்டிருந்தது. | பணிப்பாளர் நாயகம் - முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அறிவுரையின் படி செயற்படுவதற்கு அனுப்பப்பட்டுள்ளது. பணிப்பாளர் நிருவாகம் - தகைமையுடைய விண்ணப்பதாரிகள் காணப்படாமையால் அமைச்சின் அறிவுரையின் படி மீண்டும் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி) – முகாமைத்துவ திணைக்களத்தின் அறிவுரையின் படி பணிப்பாளர் சபையின் | அதிகாரசபை பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொண்டு அத்தியவசியமான வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது.<br>பணிப்பாளர் சந்தைப்படுத்தல் (சர்வதேச) - இந்த பதவியை ஒழிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.<br>மத்திய முகாமைத்துவ மட்டத்தின் பதவிகள் - வெற்றிடங்களை நிரப்புவதற்காக அமைச்சிடம் அங்கீகாரம் வினவப்பட்டுள்ளது.<br>06 கனிஷ்ட முகாமைத்துவ பதவிகள் - வெற்றிடங்களை நிரப்புவதற்காக அமைச்சின் அங்கீகாரம் வினவப்பட்டுள்ளது. | |
| (எ) | 2024 ஆண்டின் போது சேவையை விட்டுச் சென்றிருந்த 03 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 715,821 இற்கான கடன் மீதியொன்று காணப்பட்டதுடன், அது தீர்க்கப்படாமல், அந்த உத்தியோகத்தர்களின் சேவையை விட்டு விலகுதல்களை அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | திருமதி. அனுஜா சுபாசினி சேவைக்கு சமுகமளிக்கப்படாததால், சேவையை விட்டுச் சென்றதாக கணிக்கப்பட்டுள்ளதுடன், அவருக்குரிய பணிக்கொடை இதுவரை பெற்றுக்கொண்டிருக்கவில்லை. அதனால், அந்தக் கடன்தொகையை குறிப்பிட்ட பணிக்கொடையிலிருந்து அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. திருமதி ஒமேசானி கமகே அவர்கள் அதிகாரசபையில் இருந்து பெற்றுக்கொண்டிருந்த இடர் கடன் மீதி ரூபா 10,000 தொகை தவணைகளாக செலுத்துவதற்கு இணங்கியுள்ளார். 2025 ஏப்ரல் மாதம் ரூபா 10,000 தொகை அதிகாரசபைக்கு செலுத்தியுள்ளார். திரு. ரொஷான் சோமரத்த அவர்களுக்குரிய பணிக்கொடைத் தொகையிலிருந்து கழித்துக்கொள்ளும் படி அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அதன்படி, பணிக்கொடை | பணிக்கொடை தொகையை பெற்றுக்கொள்ள முன்னர் கடன் மீதியை அறவீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தொகையிலிருந்து கடன் தொகை அறவிடப்பட்டுள்ளது. | |
| (ஏ) | தென்னை சார் கைத்தொழில்கள் மூலம அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவுகள் Payment Gateway ஊடாக 603/09/2022 மற்றும் 2022 மே 25 திகதிய பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் மீது 2022 நவம்பர் 23 திகதி ரூபா 25,000 தொகை வைப்புச் செய்து கணக்கொன்று ஆரம்பிக்கபட்டிருந்த போதிலும், அதனூடாக கொடுக்கல் வாங்கல் ஏதும் மீளாய்வாண்டு இறுதி வரை மேற்கொண்டிருக்காமையால் அந்தக் கணக்கு குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. | செலான் வங்கியினூடாக செயற்படுத்த திட்டமிடப்பட்டிருந்த Payment Gateway செயற்பட்டிருக்காததுடன், 2025 ஆண்டில் இதனை மக்கள் வங்கியினூடாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. செலான் வங்கியின் கணக்கை மூடுவதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. | செயற்படாத வங்கிக் கணக்குகளை செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு ஆதனங்கள், சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையின் 1,162 சதுர அடி கொண்ட தரை மாடியை பயன்படுத்தி நிறுவப்பட்டிருந்த வர்த்தக சேவை நிலையம் நிறுவுவதற்காக ரூபா 4,869,826 தொகை செலவிடப்பட்டிருந்தது. தொலைபேசியுடாக நுகர்வோரின் சிக்கல்களை தீர்ப்பதற்கு அழைப்பு நிலைய அலகொன்று, நுகர்வோருக்கு மிகவும் சிறந்த சேவையொன்று வழங்குவதற்காக பவலம், பிளடினம், தங்கம், வெள்ளி அங்கத்துவ காட் பத்திரங்கள் அறிமுகப்படுத்துவதன் மூலம் வெளிநாட்டு நுகர்வோரை இனங்காண்பதற்காக நுகர்வோர் உபசரணை அலகு ஒன்று, அதிகார சபையினால் உள்நாட்டு மற்றும் சர்வதேச தென்னைசார் தரவுகள் நுகர்வோருக்கு வழங்குவதற்காக | தென்னைசார் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிச் சங்கத்தினால் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ள NCCI நிறுவனத்திற்காக மாதாந்த வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | விளைவற்ற செலவொன்றாக திட்டமிட்டவாறு செயற்படுத்துவதற்கு ஆளுகை அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சந்தைப்படுத்தி நுட்ப அலகொன்று, தரப் பாதுகாப்பு, தயாரிப்பு அபிவிருத்தி மற்றும் விற்பனைப் பிரிவுகளின் தகவல்கள் வழங்கல் மற்றும் தகவல்கள் சேகரிப்பதற்கு தகவல் தொழில்நுட்ப அலகு ஒன்று மற்றும் இந்த நிலையத்தின் அனைத்து தொழிற்பாடுகளையும் திட்டமிடுவதற்காக திட்டமிடல் அலகு ஒன்று உட்பட 5 அலகுகள் மூலம் இந்த நிலையத்தின் அலுவல்கள் மேற்கொள்வதற்கு அதிகாரசபை திட்டமிட்டிருந்த போதிலும், மேற்கூறிய எதுவித கருமங்களும் மீளாய்வாண்டின் போது மேற்கொண்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | தும்புக் கைத்தொழில் அபிவிருத்திக்கான பயிற்சி நிலையம் ஒன்றான 2006 ஆண்டுடின் போது துன்கன்னாவ தும்பு அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2023 ஆண்டு பயிற்சிப் பாடநெறி ஒன்றுகூட நடாத்தியிருக்காமை தொழிற்சாலையில் காணப்படுகின்ற 18 இயற்திரங்களில் 14 இயந்திரங்கள் செயற்படாமல் காணப்படல். செயற்படு மட்டத்தில் காணப்படும் இயந்திரங்களும் திருத்த வேலை மேற்கொள்ளப்பட வேண்டிய காரணத்தினால் பயிற்சி நிலையம் நிறுவப்பட்ட குறிக்கோள் நிறைவேற்றப்படவில்லை எனவும், காணப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் விளைவற்று துருப்பிடித்துக் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | துன்கன்னாவ தும்பு ஆராய்ச்சி நிலையத்தில் செயற்படாத நிலையில் காணப்படும் உபகரணங்களை நேர்ட் நிறுவனத்தின் உத்தியோகத்தர் ஒருவர் மூலம் பெறுமதி மதிப்பீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றதெனவும், இந்த மாத இறுதி வாரத்தில் வழங்கப்பட முடியும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட அறிக்கையின் பரிந்துரையின் படி நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | அரச தொழில் முயற்சிகள் குழுக் கூட்டத்தில் இது தொடர்பாக பரிந்துரையொன்று சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், இதற்காக நீண்ட நடவடிக்கை முறையொன்று கடைபிடிக்க நேரிட்டிருந்ததால் செயற்படுத்துவதற்காக அக்கரை செலுத்த வேண்டும். |

## 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஏற்றுமதியை நோக்கமாக கொண்டு தென்னை சார் உற்பத்தி கைத்தொழில்களுக்கு சோலர் முறைமையை பொறுத்துவதற்காக சலுகை வட்டி சதவீதத்தின் கீழ் கடன் வழங்குவதற்கு 2024 நவம்பர் 21 திகதி தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றிற்கு அணுகியிருந்தது. இதற்காக பதிவு செய்யப்பட்ட 13 விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்பட்டதிருந்ததுடன், கணக்காய்வுத் திகதியாகிய 2025 ஏப்ரல் 17 திகதி வரை கடன் தொகை ஏதும் வழங்கியிருக்கவில்லை. | தொழிற்சாலை உரிமையாளர்களை அறிமுகப்படுத்தும் கடிதம் பிரதேச அபிவிருத்தி வங்கியின் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரிவு 11 இன் பிரகாரம் பிரதேச அபிவிருத்தி வங்கியினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதாவது<br>• கடன்படுவோரின் தற்போது வங்கியினால் கடைபிடிக்கப்படும் பிணைப் பொறுப்புக்கள் மற்றும் ஏனைய தேவைப்பாடுளை பூர்த்தி செய்தல்.<br>• கடன்படுவோர் தொடர்பாக கறைநிரலை பரிசோதித்தல்.<br>• கடன் அறவீடு தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்தல்<br>ஆகிய அலுவல்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் கடன் தொகையை விடுவிப்பதற்கு முன்னர் அதிகாரசபையை அறிவுறுத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | கடன் திட்டம் செயற்படுத்தும் வரையறைகளை கண்டறிந்து அத்தியவசிய நிலைமையின் கீழ் வரையறையை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கப்ருக கடன் திட்டத்தின் கீழ் 2023 ஆண்டின் போது ரூபா 112,550,000 தொகை பணம் வழங்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்த கடன் தொகை ரூபா 58,658,000 தொகையாக காணப்பட்டமையால் கடன் வழங்குதல் 48% வரை குறைவடைந்திருந்தது என அவதானிக்கப்பட்டது. | இந்த விண்ணப்பங்களில் புதிய கைத்தொழில்கள் ஆரம்பிப்பதற்காக கடன் விண்ணப்பத்திருந்த விண்ணப்பதாரிகள் புறக்கணிக்கப்பட்டிருந்தது. நஞ்சுடனான தேங்காய் எண்ணெய் சந்தைக்கு வழங்கப்பட்டதுடன், கப்ருக ஜயஇசுரு கடன் திட்டத்திற்கான குழுவினால் | கைத்தொழிலாளர்களுக்கு கடன் வழங்குவதற்கும், அந்த கடனை அறவீடு செய்வதற்கும் அதிகாரசபை வினைத்திறனுடன் உத்திகள் தயாரித்து செயற்படுத்த வேண்டும். |

தேங்காய் எண்ணெய் கைத்தொழிலுக்காக கடன் வழங்கப்படும் போது இயந்திரங்களை நிறுவுவதற்காக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. மேலும், கணக்கில் பேணிச் செல்ல வேண்டிய தொகையாகிய ரூபா 200 மில்லியனை மிகைத்திருந்ததால் தற்காலிகமாக சில மாதங்கள் கடன் வழங்குவதை நிறுத்த நேரிட்டிருந்தது. (2024 செம்தம்பர் மாதம் 2025 பெப்ரவரி மாதம் வரை) அங்கு கைத்தொழிலாளர்கள் செலுத்தும் தவணைகள் காரணமாக கணக்கில் பணத்தின் எண்ணிக்கை அதிகரித்தமையால் மீண்டும் கடன் வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.